(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | | |
|---|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | } | CC.No.122/2020 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW– 9

| | | |
|---|---|---|
| பெயர் | : | அஷிதா ஜீபி |
| த/பெ | : | கிளாட்சன் ஜோசப் |
| கிராமம் | : | முழுக்கோடு |
| வட்டம் | : | விளவங்கோடு |
| வயது | : | 35 |

**( எதிரி ஆஜர்)**

2024 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை :–**

1) நான் தற்போது மார்த்தாண்டத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது சிஎம்சி கல்லூரியில் முதுநிலை பட்டம் பயின்று வருகிறேன். நான் இதற்கு முன்பு இராதாபுரம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணி செய்து வந்தேன்.

2) கடந்த 30.04.2016 அன்று காலை 07.40 மணியளவில் பணியில் இருந்த போது லெட்சுமி வயது 46, என்பவர் என்னிடம் சிகிசைக்காக வந்தார். அவரை பரிசோதனை செய்த போது அவரை அடையாள தெரிந்த ஒரு நபர் அன்றைய தினம் 06.30 மணியளவில் அவரது வீட்டில் வைத்து கையாலும்,

மரக்கட்டையாலும், அடித்ததாக குறிப்பிட்டார். அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது,

1) வலது கையில் தொடு வலியும் வீக்ககாயமும் இருந்தது.

2) இடது காலுக்கு அருகே சிராய்ப்பு காயம் இருந்தது.

அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்து கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரிக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். அவருடைய காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். **காய சான்று(அ.சா.ஆ.7)** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

1) அன்றைய தினம் மேல் சிகிட்சைக்காக அனுப்பி வைத்தேன். எத்தனை மணிக்கு சிகிட்சைக்காக அனுப்பி வைத்தேன் காய சான்றில் துலங்காது. ஒரு நபர் தன்னிச்சையாக கீழே விழுந்தால் காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாராண காயம் என்றால் சரிதான். போலீசார் எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் காய சான்று வாங்கும் போது விசாரணை செய்தார்கள். அதன் பின்பு உங்களை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

(ஒம்.)திரு.மு.ஆனந்த்,பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் (ம)
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
இராதாபுரம்.